**Emperor Journal of Classical Tamil Studies**

| | | |
|---|---|---|
| **ISSN: 2582-2977** | **Mayas Publication®** | **www.mayas.info** |
| **Volume-VI** | **Issue-XI** | **November 2025** |

# சவ்வாதுமலைவாழ் மக்களின் கலைகள்

**முனைவர் கு. இராதாகிருஷ்ணன்**
*உடற்கல்வி இயக்குனர்*
*சர் தியாகராயா கல்லூரி*
*சென்னை – 600 021.*

**ஆய்வுச்சுருக்கம்**

சவ்வாதுமலை வேலூர், திருவண்ணாமலை, கிருட்டினகிரி ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கிய மலைப்பகுதி, இதில் பதினொரு ஊராட்சிகள் உள்ளன அவற்றிலுள்ள எழுபத்து மூன்று கிராமங்களும் இவ்வாய்வுக்குரிய களமாகும். சவ்வாதுமலையைத் தம் வாழிடமாகக் கொண்ட மலையாளிகளிடத்தில் உள்ள கலைகளில் கலைகளைக் குறித்து விளக்குவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

## I.முன்னுரை

மனிதனுக்கு இயல்பாகத் தோன்றுகின்ற உணர்வு கலைவுணர்வு இயல்பாகத் தோன்றி இயற்கையோடு இணைந்து உணர்வுகளின் உறைவிடமாய் மக்களைக் களிப்படையச் செய்யும் கலைகளை நாட்டுப்புறக் கலைகள் எனலாம் பண்டைக் காலத்தில் மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்வு நடத்தி பல கலைகளை உருவாக்கி மகிழ்ந்தான். மனமகிழ்ச்சி ஒன்றே முக்கிய நோக்கமாக இருந்தது. மனித உணர்வுகளுக்குக் கலைகள் வடிகாலாய் இருந்தன உணர்ச்சியின் வெளியீடாகக் கலைகள் இருந்ததினால் கால வெள்ளத்தைக் கடந்து நின்று வாழ்ந்து, வளர்ந்து வந்துள்ளன. நாட்டுப்புறக் கலைகள் நாட்டுப்புற

மக்களின் ஜீவ ஊற்றாகும். நாட்டுப்புற மக்களது வாழ்வோடு பின்னிப்பினைந்திருக்கின்றன இவ்வடிப்படை அலகான சவ்வாதுமலைவாழ் மக்களிடம் உள்ள கலைகளைப் பற்றி நோக்குவதும், கலைகளில் அவர்கள் பெற்றிருந்த இடம் குறித்து ஆய்வதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கலைகள்**

சவ்வாதுமலைவாழ் மக்களிடம் தெருக்கூத்து, சேவையாட்டம், அம்மன் கரகம், எருதாட்டம், பச்சைக்குத்திக் கொள்ளுதல் முதலான கலைகள் திருவிழாக் காலங்களில் நிகழ்த்துவதைக் காணமுடிகிறது.

**தெருக்கூத்து**

“தெருவில் நடத்தப்படும் கூத்துதெருக்கூத்து, நாடகமேடையோ, காட்சித்திரைகளோ அல்லாமல் எளிய முறையில் தெருவிலும், திறந்தவெளி அரங்கிலும் இரவு முழுவதும் நடத்தப்பெறும் கூத்து தெருக்கூத்து”[1] என்பர்.

சவ்வாதுமலையில் வாழும் மலையாளிகள் தை, பங்குனி, ஆடி போன்ற மாதங்களிலும் திருவிழாக் காலங்களிலும் தெருக்கூத்தை மிகச் சிறப்பாக நிகழ்த்துகிறார்கள். ஒவ்வொரு கோவில்களிலும் ஒரு நாடக அரங்கம் அல்லது மேடை இருக்கும். இவை இல்லாத கோவில்களில் மூன்று அல்லது நான்கு தெருக்கள் இணைகின்ற இடத்திலும் வெட்டவெளியிலும் இக்கலை நிகழ்த்தப்படுகிறது. இக்கலையை மழை வெண்டிச் செய்யும் சடங்குகளிலும் சமூகச் சடங்குகளிலும் நிகழ்த்தப்பட்டு வருகிறது. தெருக்கூத்தை வழிபாட்டுக் கடனாக மலையாளிகள் கருதுகின்றனர். மேலும் இக்கூத்தினை ஆடுபவர்கள் மலையாளிகளே. இக்கூத்தினைக் காண வருபவர்களிடம் கட்டணம் பெறும் வழக்கம் ஏதும் இல்லை. இக்கூத்துக்கு ஏற்படும் செலவுகளை அம்மலையாளிகளிடம் நன்கொடையாகப் பெறுவதுதான் மரபு. மலையாளிகள் தெருக்கூத்து நிகழ்த்துவதை மதிப்பாகக் கருதுகிறார்கள்.

இக்கூத்து இரவு பத்துமணியாளவில் தொடங்கி மறுநாள் காலை எட்டுமணி வரை

நடைபெறும்.பார்வையாளர்கள் நேரத்தைப் பொருட்படுத்தாது அமைதியாக உட்கார்ந்து கண்டுகளிக்கின்றனர். இதில் இடம்பெறும் இசையும் நாட்டியமும் நீண்ட வசனப் பேச்சும் இடம்பெறும்.பாடல்கள் உரக்கக் கத்திப்பாடுவது கூத்தின் மரபு, அவ்வப்போது மக்கள் மனதைக் கவரும் திரைப்படங்களில் வரும் சில பாடல்களைப் பாடியும் ஆடியும் நடிப்பர். இக்கலைகளில் பயன்படுத்தும் இசைக்கருவிகள் மிருதங்கம், புல்லாங்குழல், டோலக், தாளம், ஆர்மோனியம், முகவீனை ஆகியவையாகும்.

இதிகாசங்கள், புராணங்கள், சரித்திர நிகழ்ச்சிகள், வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் இதில் கருப்பொருள்களாகின்றன[2] என்கின்றனர்.

இக்கூத்தினை நிகழ்த்தும் மலையாளிக் கலைஞர்களுக்கும் சமவெளிப் பகுதியில் நிகழ்த்தும் தெருக்கூத்துக் கலைஞர்களுக்கும் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. மலையாளிக் கூத்துக்கலைஞர்கள் அம்மலைகளில் நடைபெறும் கோவில் திருவிழாக்களின் போதும், இறப்பு நடந்த வீட்டில் ஈமக் காரியம் முடிந்த பின்னும் பல்வேறு சமூகச் சடங்குகளின் போதும் எந்தவொரு வருவாயையும் எதிர்ப்பார்க்காமல் அக்கலைஞர்கள் இக்கூத்தினை நிகழ்த்துகிறார்கள். சமவெளிப் பகுதிகளில் வாழும் மக்கள் இவர்களின் கூத்துத் திறனைப் பாராட்டும்விதமாகச் சமவெளிப் பகுதிவாழ் மக்கள் மலையாளிக் கூத்துக் கலைஞர்களைப் பயன்படுத்தி இக்கூத்தினை நிகழ்த்துகின்றனர். அதனால் இக்கூத்துக் கலைஞர்களுக்குக் கனிசமான அளவில் வருவாயும் இதன் மூலம் கிடைக்கிறது.

தற்போது பின்வரும் சூழல்களில் தெருக்கூத்து நிகழ்த்தப்பட்டு வருவதாக அறிவுநம்பி கூறுவதை, தே. லூர்து தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

பாரதம் அல்லது திரௌபதி அம்மன் விழாக்களிலும் வேறு பல கிராம விழாக்களிலும் எடுத்துக்காட்டாக மாரி அம்மன், அங்காள அம்மன் முதலிய ஊர்த்தெய்வங்களுக்கும் பெருந்தெய்வங்கள் என்று அழைக்கப்படும் சிவன், திருமால்,

விநாயகர், முருகன் ஆகியோருக்கும் எடுக்கப்படும் விழாக்களிலும் நிகழ்த்தப்படுகின்றன.[3]

இறப்புச்சடங்குகள், காது குத்துதல் போன்ற தனிநபருக்கு எடுக்கப்படும் விழாக்களிலும் திருப்பதித் திருயாத்திரை சென்று திரும்பும் போதும் இம்மலைகளில் இக்கூத்து நிகழ்த்தப்படுகின்றன. மழை வேண்டித் தெய்வ வழிபாடுகள் நடைபெறும் போதும் கூத்துக்கள் நிகழ்த்தப்பெறும். சில வேலைகளில் ஊரில் உள்ள இரு கட்சியினரிடையேயுள்ள பிணக்குகள் தீர்ந்து சமாதானம் ஆகும் போதும், பண்பாட்டுத் திருவிழாக்கள் நடைபெறும் போதும் சடங்குச் சார்பன்றி சாதாரணமாக நிகழ்த்தப்பெறும்.

**சேவையாட்டம்**

சேர்வையாட்டம் என்பது சேவையாட்டம் என மருவி வழக்கத்தில் உள்ளது என்றும் திருமாலுக்குச் சேவை செய்வதற்காக ஆடப்பெறும் ஆட்டமாதலால் இது சேவையாட்டம் எனக் காரணப்பெயராயிற்று என்றும் சிலர் கருதுவர்.

இந்த ஆட்டத்தினை உறுமிக் கோமாளி ஆட்டம் என்றும் அழைப்பர். காரணம் கோமாளியை மையமாகக் கொண்டு உறுமி முழக்கத்துடன் இசைப் பாடற் பின்னணியில் இது ஆடப்படும் சிறப்புடையது ஆகுமென்பர்.[4]

இவ்வாட்டத்தை மலையாளிகள் சிறப்பாகக் கொண்டாடப்படும் விழாக்களிலும் சித்திரை மாதத் திருவிழா போன்ற காலங்களிலும் நடத்துகின்றனர். ஆண்கள் மட்டுமே இவ்வாட்டத்தை ஆடுகின்றனர். இவ்வாட்டத்தில் 12 பேர் பங்கேற்பர் முன்னர் 12 முதல் 16 பேர் வரை ஆடுவர் என்றும் தற்போது இசைக் கலைஞர்கள் உட்பட ஒரு குழுவில் 36 பேர் கலந்துகொள்வர் என்றும் கூறுகிறார்கள். 12 வயதுக்கு மேற்பட்டோர் கலந்துகொள்வர். இவர்களில் ஒருவர் கோணங்கி இவர் நகைப்புட்டுவார். இந்த ஆட்டத்திற்கு இரண்டு உறுமி மேளங்களும், இரண்டு தலை உறுமியும், இரண்டு

புல்லாங்குழலும் இசைக்கருவிகளாகப் பயன்படுத்துகின்றனர். இசைக்கு ஏற்ப ஆட்டம் ஆடப்படுகிறது. இவ்வாட்டம் வழிபாட்டுச் சடங்குக் கலையாக விளங்குவதால் ஆட்டக் கலைஞர்கள் ஆட்டக்காலங்களில் புலால் உண்பதில்லை. ஒப்பனைப் பொருட்கள் அனைத்தையும் தம்புரான் வீடு எனப்படும் கோவில்களில் வைத்துப் பராமரிக்கின்றனர்.

சேவையாட்டத்தில் 12 விதமான அடவுகள் உள்ளதாகக் கூறுகிறார்கள். இசை மாற்றத்திற்கேற்ப ஆட்டம் மாறும் முதலில் வட்டமாக ஆடத்தொடங்கி, இடையில் மூன்று வரிசையாக நின்று ஆடி இறுதியில் வட்டமாக ஆடி முடிப்பர். கைகளில் உள்ள பிரம்புகளை நேராகப் பிடித்துக்கொண்டு சுற்றி சுற்றி வருவதும் பிரம்புகளால் ஒருவருக்கொருவர் தட்டிக்கொள்வதுமாகத் தொடரும் இந்த ஆட்டம் சில நேரங்களில் கோலாட்டத்தை ஒத்துக் காணப்படுகிறது என்கின்றனர்.[5]

**அம்மன் கரகம்**

சவ்வாதுமலையில் நடக்கும் அம்மன் கோவில் விழாக்களில் கரகமெடுத்தல் இன்றியமையாத சடங்காகக் கருதப்படுகிறது. கரக ஒப்பனை, கரகமெடுப்பவரின் ஒப்பனை, கரகம எடுக்கும் முறை, இசைக்கருவிகள், கரகம் பற்றிய நம்பிக்கைகள் முதலியவற்றில் கிராமத்திற்கு கிராமம் ஒருசில மாறுபாடுகள் காணப்படுகிறது. கரகம் வழிபாட்டிற்குரிய புனிதப்பொருளாகவும், தெய்வ வடிவமாகக் கரகமெடுப்பவர் வணங்கத் தக்கவராகவும் கொள்வது பொதுவாக உள்ளது. கோவில் புசாரி அல்லது கரகம் எடுக்கும் பரம்பரை உடையவர்கள் மட்டுமே கரகம் எடுப்பர். கரகம் எடுப்பதற்குமுன் சில நாட்கள் விரதமிருந்து தூய்மைக் காப்பர். இக்கரகத்தை ஆண்கள் மட்டுமே எடுப்பர்.

நிகழ்ச்சித் தொடங்கும் கோவிலிருந்து ஆற்றுக்குச் செல்லும் பாதை தூய்மைப்படுத்தப்படும். விரதம் இருக்கும் கரகக்காரர் கோவிலிருந்து மேளத்தாளங்களுடன் அருகில் இருக்கும் நீர்நிலைகளுக்கு அழைத்துச் செல்லப்படுவர். அங்குக் கரகம் செய்யப்படும் கரகக்காரர் நீராடி மஞ்சள்

தடவிய வேட்டியைக் கட்டிக்கொண்டு பின் அவருக்குச் சாமி வரவழைத்து புசாரி அவர் தலையில் கரகத்தைத் தூக்கி வைப்பார். கரகம் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டுப் பக்தர்கள் அவரின் காலில் வீழ்ந்து அருள் கேட்பர்.[6]

கரகாட்டம் மாரியம்மனுடன் தொடர்புடையதாகும். கரகம் என்ற சொல்லாட்.சியை "நூலே கரகம் முக்கோல்" என்னும் தொல்காப்பிய நூற்பாவிலும், கலித்தொகையிலும் காணலாம். பேராசிரியர் கரகம் என்பதற்குக் "குண்டிகை" எனப் பொருள் கொள்கிறார். உபநிடதத்திலும் கரகாட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலம்பு குறிப்பிடும் குடக்கூத்திலிருந்தே இன்றைய கரகாட்டம் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்பர். இவ்வாட்டத்தைத் தஞ்சை மற்றும் கிழக்கு இராமநாதபுரத்தில் கரகச் செம்பு ஆட்டம் என்றும் மதுரை மாவட்டத்தில் கரகாட்டம் என்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் கும்ப ஆட்டமென்றும் கூறுவர்.[7]

**எருதாட்டம் அல்லது காளை விடுதல்**

சங்க இலக்கியத்தில்கலித்தொகையிலும், பட்டினப்பாலையிலும் ஏறு தழுவுதல் நிகழ்ச்சிகளை நம்மால் காணமுடிகிறது.சங்க காலத்தில் ஆண்கள் காளையை அடக்கினால் தான் பெண் கொடுப்பர் என்ற வழக்கம் நம் சங்க இலக்கியத்தைக் கற்றதன் மூலம் அறியலாம். பிறகு சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரத்திலும், புறப்பொருள் வெண்பாமாலையிலும் ஏறுதழுவுதல் நிகழ்ச்சியைக் காணமுடிகிறது.

சேலம் மாவட்டத்தில் பெத்தநாயக்கன் பாளையத்தில் கிடைத்த நடுகல் ஒன்று எருது விளையாடி மரணம் அடைந்த ஒருவனைப் பற்றி எடுத்துரைக்கிறது. மேலும் தருமபுரி மாவட்டத்தில் கிடைத்தஏராளமான கல்வெட்டுக்களிலும் ஏறு தழுவுதல் நிகழ்ச்சிப் பொறிக்கப்பட்டுள்ளது என்று தொல்பொருள் ஆய்வாளர் பெ.அர்தநாரீஸ்வரன் குறிப்பிடுவதை அ. பிச்சை தனது நூலில் பதிவு செய்துள்ளார்.[8] சவ்வாதுமலையில் பொங்கல் திருநாளில் எருதாட்டம் நிகழ்த்துவது நீண்டகால வழக்கம். ஊரை ஒட்டியுள்ள மந்தை என அழைக்கப்படும் வெட்டவெளியில் இது

நிகழ்த்தப்படுகிறது. அம்மன் கோவிலுக்கு எதிரே அமைந்த இந்த வெட்டவெளியில்தான் திருவிழாக்களின் போது மலையாளிகள் ஒன்று கூடுவர். எருதாட்டத்திற்கான காளைகளை முன்னரே தேர்ந்தெடுக்கப்பட்டு மாடுகளை அலங்காரித்து பட்டியில் அடைப்பர். பட்டியிலிருந்து அவற்றை ஒவ்வொன்றாக வெளிக்கொணர்ந்து இரண்டு பக்கமும் சம அளவு உடையதாகக் காளையின் கழுத்தில் கயிற்றினைக் கட்டுவர். கயிறு கட்டப்பட்ட பின் காளையினை மந்தைக்குக் கொண்டு வருவர். இரு பக்கத்துக் கயிற்றினையும் பிடித்து இடம் இருக்கும் வரை பலர் ஒன்றாகச் சேர்த்துப் பிடித்துக்கொள்வர்.ஒரு பக்கத்திற்கு 15 பேர் எனக் கயிற்றினைப் பிடிப்பதால் காளை பயந்து செல்லவோ, முன்னால் இருப்பவரை முட்டவோ காளைகளுக்குச் சிறிதும் வாய்ப்புக் கிட்டுவதில்லை. அதன் முகத்தின் முன்னால் இருப்பவர் ஒரு மூங்கிலால் காளையினைச் சீண்டி அதனைக் கோபமுறச் செய்வர்.

காளை சோர்வுற்று அமைதியாக இருக்குமானால் அதன் பின்னால் நிற்பவர்கள் அதனை உசுப்பிவிடக் கூக்குரலிடுவர். மேற்கூறிய இரண்டு முறைகளிலும் காளைக்குக் கோபம் வரவில்லைஎனில் வெறுமனே அதனை முன்னும் பின்னும் இழுத்தடிப்பர். மேற்கூறிய முறையில் அது சோர்வுற்றுக் களைப்படைந்ததும் அதனை விட்டுவிடுவர். சுமார் 10 முதல் 15 காளைகளைக் கொண்டு மேற்கூறியவாறு எருதாட்டம் நிகழ்த்துவர்.[9]

**பச்சைக்குத்திக் கொள்ளுதல்**

பச்சைக்குத்திக் கொள்ளும் வழக்கம் மலையாளிகளிடம் முன்னர் இருந்ததாகக் கூறுகின்றனர். இதனைக் கை, கால், தொடைப்பகுதி முதலிய இடங்களில் பச்சைக்குத்திக் கொள்கின்றனர். இதை அழகுக்காக மலையாளிகள் குத்திக்கொள்வதாகக் கூறுகின்றனர். தற்போது இந்நிலை பெரிதும் மாற்றமடைந்து இன்றுள்ள இளைய சமூகத்தினர் பச்சைக்குத்திக் கொள்ளும் பழக்கத்திற்கு மாறாக முகவர்ணபுச்சியையும்,

மெகந்தியையும் பயன்படுத்துகிறோம் என்று கூறுகிறார்கள்.[10]

## II.தொகுப்புரை

மேற்கூறிய கலைகள் அனைத்தும் திருவிழாக்களின் போதும், சமூகச் சடங்குகளின் போதும் நிகழ்த்தப்பட்டு வருகிறது. இந்நிலை தற்போது பெரிதும் மாற்றமடைந்து ஆடல், பாடல், கச்சேரி, பாட்டுக்கச்சேரி எனச் சமவெளிப் பகுதிகளில் நிகழ்த்தப்பெறும் கலைகள் எல்லாம் சவ்வாதுமலைப் பகுதியில் நிகழ்த்தப்பெறுவதால் தெருக்கூத்து, கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் வாழ்வாதாரம் தடுமாறும் நிலையில் உள்ளது.

### அடிக்குறிப்புகள்

1. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 183.
2. சாம்பசிவம், வயது 42, தெருக்கூத்துக் கலைஞர், நடுக்குப்பம் கிராமம், நேர்காணல் (13-01-2022).
3. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், ப.291.
4. செ. வைத்தியலிங்கன், தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, ப.57.
5. கா. இராஜேந்திரன், வயது 38, பட்டதாரி ஆசிரியர், நடுக்குப்பம் கிராமம், நேர்காணல் (14-01-2022).
6. வெ. காளியம்மாள், வயது 49, கல்லாத்தூர் கிராமம், நேர்காணல்
(15-01-2022).
7. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, பக். 173-174.
8. அ. பிச்சை, தமிழர் பண்பாட்டில் விளையாட்டுக்கள், ப.62.
9. தா. பொன்னுசாமி, வயது 55, மூப்பர், தோப்பூர் கிராமம், நேர்காணல்
(16-01-2022).
10. சின்னத்தாய், வயது 44, சத்துணவு அமைப்பாளர், புலியுர் கிராமம், நேர்காணல் (17-01-2022).

## III.துணைநூற்பட்டியல்

1. சக்திவேல், சு., 1999, நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. லூர்து, தே., 1997, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை.
3. வைத்தியலிங்கன், செ., 1991, தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.
4. பிச்சை, அ., 2004, தமிழர் பண்பாட்டில் விளையாட்டுக்கள், முத்தமிழ் மன்றம், சென்னை.